www.StudyGuideIndia.com

**8276**

Register Number

**Part III**

# கணக்குப்பதிவியல் / ACCOUNTANCY

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

*அறிவுரை :* அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறை கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

## பகுதி - அ

( மதிப்பெண்கள் : 30 × 1 = 30 )

*குறிப்பு :* **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. அடக்கவிலை அல்லது ........................ விலை, இதில் எது குறைவோ அந்த விலையில் இறுதி சரக்கிருப்பு மதிப்பிடப்படும்.

2. முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் இருப்புநிலைக் குறிப்பில் ........................ பக்கத்தில் தோன்றும்.

3. முதல் மீது வட்டி ........................ கணக்கில் பற்று வைக்கப்படும்.

4. இறுதி முதலை அறிவதற்கு, ஆண்டு ........................ நிலை அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும்.

5. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் ரூ. 60,000, முதல் ரூ. 45,000 எனில் அந்நிறுவனத்தின் பொறுப்புகள் ........................ ஆகும்.

[ Turn over

www.StudyGuideIndia.com

6. சொத்தின் மொத்த அடக்கவிலை மீது தேய்மானம் கணக்கிடும் முறை ........................ முறை என அழைக்கப்படும்.

7. குத்தகைகள் மீது தேய்மானம் கணக்கிட ........................ முறை பயன்படுத்தப்படுகிறது.

8. மொத்த இலாபத்தை ........................ இருந்து விற்றபொருளின் அடக்க விலையைக் கழிப்பதன் மூலம் காணலாம்.

9. மொத்த விற்பனை ரூ. 2,00,000, ரொக்க விற்பனை ரூ. 65,000 எனில் கடன் விற்பனை ரூ. ........................ ஆகும்.

10. ........................ ஒரு பயனுள்ள கருவியாக ரொக்கத் திட்டப்பட்டியல் உள்ளது.

11. இந்திய கூட்டாண்மைச் சட்டம் உருவாக்கப்பட்ட ஆண்டு ........................ ஆகும்.

12. தனியாள் வணிகத்தில் உரிமையாளரும் மேலாண்மை செய்பவரும் ........................ .

13. விலகலின் பொழுது, தொழிலின் மறுமதிப்பீட்டு இலாபம் ........................ கூட்டாளிகளாலும் பகிரப்படும்.

14. பொது வெளியீடு ........................ நாட்களுக்கு அதிகமாக அனுமதிக்கப்படுவதில்லை.

15. எஞ்சிய விண்ணப்ப தொகையில் ஒதுக்கீட்டிற்கு சரிக்கட்டிக் கொள்ள கூடிய ஒதுக்கீடு ........................ ஆகும்.

www.StudyGuideIndia.com

II. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

16. கொடுபட வேண்டிய வாடகை ஒரு

அ) பொறுப்பு

ஆ) சொத்து

இ) வருமானம்.

17. மொத்த இலாபம் மாற்றப்படும் கணக்கு

அ) முதல் கணக்கு

ஆ) இலாப நட்டக் கணக்கு

இ) இவற்றுள் எதுவுமில்லை.

18. கடன் விற்பனையை அறிய உதவும் கணக்கு

அ) செலுத்துதற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கு

ஆ) மொத்த கடனாளிகள் கணக்கு

இ) மொத்தக் கடனீந்தோர் கணக்கு.

19. ஒற்றைப்பதிவு முறை ஒரு

அ) விஞ்ஞான அடிப்படையிலான முறை

ஆ) முழுமைபெறாத இரட்டைப்பதிவு முறை

இ) இவற்றுள் எதுவுமில்லை.



www.StudyGuideIndia.com

20. ரூ. 10,000 ஆண்டுக்கு 10% வீதம் குறைந்து செல் மதிப்பு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டால் முதல் 3 ஆண்டுகளுக்கு தேய்மானத் தொகையின் மொத்தம்

அ) ரூ. 2,107

ஆ) ரூ. 2,710

இ) ரூ. 2,701.

21. குறைந்து செல் இருப்பு முறையில் தேய்மானம்

அ) ஆண்டு தோறும் குறையும்

ஆ) ஆண்டு தோறும் அதிகமாகும்

இ) ஆண்டு தோறும் நிலையாக இருக்கும்.

22. மொத்த இலாப விகிதத்தில் உள்ள உறவு முறை

அ) மொத்த இலாபம் மற்றும் மொத்த விற்பனை

ஆ) மொத்த இலாபம் மற்றும் கடன் விற்பனை

இ) மொத்த இலாபம் மற்றும் ரொக்க விற்பனை.

23. ஒரு நிறுவனத்தின் நடப்புச் சொத்துக்கள் ரூ. 60,000 மற்றும் நடப்புப் பொறுப்புகள் ரூ. 30,000 எனில் நடப்பு விகிதம் ........................ ஆகும்.

அ) 1 : 2

ஆ) 1 : 1

இ) 2 : 1.

www.StudyGuideIndia.com

24. திட்டப்பட்டியல் வெளியிடப்படுவது

அ) பணம்

ஆ) அலகுகளின் எண்ணிக்கை

இ) பணம் மற்றும் அலகுகளின் எண்ணிக்கை.

25. கூட்டாண்மை நிறுவனத்தின் குறும எண்ணிக்கை

அ) ஒன்று

ஆ) இரண்டு

இ) ஏழு.

26. சேர்க்கையில், மறுமதிப்பீட்டின் இலாபத்தை பழைய கூட்டாளிகளின் முதல் கணக்குகளில் மாற்றப்படுவது

அ) பழைய இலாபப் பகிர்வு விகிதத்தில்

ஆ) தியாக விகிதத்தில்

இ) புதிய இலாபப் பகிர்வு விகிதத்தில்.

27. இருப்புநிலைக் குறிப்பில் தோன்றக்கூடிய இனங்களாகிய இலாபநட்டக் கணக்கு மற்றும் பொதுக்காப்பு ஆகியவை மாற்றப்படுவது

அ) மறுமதிப்பீட்டுக் கணக்கில்

ஆ) கூட்டாளிகளின் முதல் கணக்குகளில்

இ) இவற்றுள் எதுவுமில்லை.



www.StudyGuideIndia.com

28. இ.ப.மா.வா. ( SEBI ) ன் கூற்றுப்படி, விண்ணப்பத்தின் போது குறைந்தபட்சம் வசூலிக்கும் தொகை வெளியீட்டு விலையில் ....................... ஆகும்.

அ) 10%

ஆ) 25%

இ) 50%.

29. வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையை விடக் கூடுதலாக விண்ணப்பங்கள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டால் அதனை ....................... என்று அழைக்கலாம்.

அ) மிகை ஒப்பம்

ஆ) குறை ஒப்பம்

இ) முழு ஒப்பம்.

30. இருப்புநிலைக் குறிப்பில் முதலினக்காப்பு ....................... பக்கம் தோன்றும்.

அ) சொத்துக்கள்

ஆ) பொறுப்புகள்

இ) (அ) மற்றும் (ஆ) இரண்டும்.

www.StudyGuideIndia.com

## பகுதி - ஆ

( மதிப்பெண்கள் : 10 × 5 = 50 )

குறிப்புகள் : i) எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) கோட்பாடு சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 50 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

31. கொடுபட வேண்டிய செலவுகள் என்றால் என்ன ?

32. நிகரமதிப்பு முறை என்றால் என்ன ?

33. வழக்கொழிவு என்றால் என்ன ?

34. இயக்க விகிதம் பற்றி குறிப்பு வரைக.

35. திட்டப்பட்டியலுக்கான தன்மைகள் யாவை ?

36. குவிந்த காப்பு என்றால் என்ன ?

37. விகித அளவு அடிப்படை ஒதுக்கீடு என்றால் என்ன ?

38. 1994 டிசம்பர் 31-ம் நாளைய இருப்பாய்வின்படி பெற்ற கழிவு ரூ. 1,000. கூடிய கழிவு பெறப்படாதது ரூ. 150 சரிக்கட்டுப்பதிவு தருக.

39. விடுபட்ட தொகையைக் காண்க :

| | ரூ. |
|---|---|
| அவ்வாண்டில் பெற்ற இலாபம் | 2,500 |
| இறுதி முதல் | 6,000 |
| அவ்வாண்டில் இட்ட கூடுதல் முதல் | 2,000 |
| எடுப்புகள் | 1,200 |
| தொடக்க முதல் | ? |

www.StudyGuideIndia.com

40. நேர்க்கோட்டு முறையில் தேய்மான விகிதம் காண்க :

| | |
|---|---|
| இயந்திரத்தின் அடக்கவிலை | ரூ. 2,30,000 |
| நிறுவுவதற்கான செலவுகள் | ரூ. 20,000 |
| பயனளிப்புக் காலம் | 10 ஆண்டுகள். |
| எறி மதிப்பு | ரூ. 50,000 |

41. சரக்கிருப்பு விற்பனை விகிதத்தைக் காண்க :

| | ரூ. |
|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | 15,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 25,000 |
| கொள்முதல் | 60,000 |

42. எவையேனும் ஐந்து ரொக்கப் பெறுதல்கள் தருக.

43. கடந்த நான்கு ஆண்டுகளின் சராசரி இலாபங்களின் மூன்று ஆண்டு கொள்முதல் என நற்பெயர் மதிப்பீடு செய்ய ஒப்புக்கொள்ளப்பட்டது. கடந்து நான்கு ஆண்டுகளின் இலாப நட்டங்கள் முதல் ஆண்டு ரூ. 50,000, இரண்டாம் ஆண்டு ரூ. 80,000, மூன்றாம் ஆண்டு ரூ. 30,000 ( நட்டம் ), நான்காம் ஆண்டு ரூ. 60,000 எனில் நற்பெயர் மதிப்பைக் காண்.

44. *S* என்ற வரையறு நிறுமத்தின் இயக்குனர்கள் ஒன்று ரூ. 10 மதிப்புடைய 2000 பங்குகளை இறுதி அழைப்பு ரூ. 2·50 செலுத்தாத காரணத்தினால் ஒறுப்பிழப்பு செய்தனர். பங்கு ஒறுப்பிழப்பிற்கான குறிப்பேட்டுப் பதிவைத் தருக.

www.StudyGuideIndia.com

## பகுதி - இ

( மதிப்பெண்கள் : 5 × 12 = 60 )

*குறிப்புகள் :* i) ஏதேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும். இவற்றுள் **45**-வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

ii) கோட்பாடு சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

45. அ) அசோக் அவர்களின் 31.03.2002 ம் நாளைய இருப்பாய்விலிருந்து எடுக்கப்பட்ட இருப்பு விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**2002 மார்ச் 31-ம் நாளைய இருப்பாய்வு**

| விவரம் | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|
| பற்பல கடனாளிகள் | 2,01,200 | — |
| வாராக்கடன் | 1,200 | — |

சரிக்கட்டுதல்கள் :

i) வாராக்கடன் ரூ. 5,000 கூடுதலாகப் போக்கெழுதுக.

ii) கடனாளிகள் மீது 10% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.

iii) கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக.

இந்த தேவையான சரிக்கட்டுப் பதிவுகளை தந்து, இவைகள் இலாப நட்டக் கணக்கிலும் இருப்புநிலைக் குறிப்பிலும் எவ்வாறு தோன்றும் ? காட்டுக.

*அல்லது*

ஆ) திரு. சுரேஷ் என்பவர் 1.4.2003 அன்று ரூ. 2,00,000 முதலுடன் தொழில் தொடங்கினார். அவர் தனது ஏடுகளை ஒற்றைப்பதிவு முறையில் பராமரித்து வருகிறார். 31.3.2004 அன்று அவரது நிலை கீழ்க்கண்டவாறு இருந்தது.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 40,000 | கை ரொக்கம் | 6,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 5,000 | வங்கி ரொக்கம் | 10,000 |
| கொடுபட வேண்டிய செலவுகள் | 7,500 | அறைகலன் | 30,000 |
| | | பொறியும் எந்திரமும் | 1,00,000 |
| | | கடனாளிகள் | 50,000 |
| | | சரக்கிருப்பு | 90,000 |
| | | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 15,000 |

31.03.2004-ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாபம் அல்லது நட்டத்தைக் கணக்கிடு.

[ Turn over

www.StudyGuideIndia.com

46. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை ?

47. ரொக்கத் திட்டப்பட்டியல் தயாரிப்பதில் உள்ள நிலைகளை விளக்கு.

48. தியாக விகிதத்திற்கும் ஆதாய விகிதத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

49. 1.10.2000 அன்று ஒரு நிறுமம் ரூ. 6,00,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. நிறுவுகைச் செலவுகளாக ரூ. 40,000 செலவழிக்கப்பட்டது. நிறுவனம் ஆண்டு தோறும் தேய்மானம் 20% குறைந்து செல் இருப்பு முறையில் நீக்கியது. ஒவ்வொரு ஆண்டும் கணக்கேடுகள் மார்ச் 31 அன்று முடிக்கப் பெறுகின்றன. இயந்திரக் கணக்கையும், தேய்மான கணக்கையும் மூன்று ஆண்டுகளுக்கு தயார் செய்க.

50. பின்வருவனவற்றைக் கொண்டு இயக்க இலாப விகிதம், இயக்க விகிதம், மொத்த இலாப விகிதம், நிகர இலாப விகிதம் ஆகியவற்றைக் கணக்கிடு.

| | ரூ. |
|---|---|
| விற்பனை | 1,00,000 |
| பங்காதாயம் பெற்றது | 400 |
| மொத்த இலாபம் | 30,000 |
| நிகர இலாபம் | 26,600 |
| நிர்வாகச் செலவுகள் | 1,000 |
| விற்பனைச் செலவுகள் | 2,000 |
| முதலீடுகள் விற்றதில் நட்டம் | 800 |

www.StudyGuideIndia.com

51. *M*, *R* என்ற கூட்டாளிகள் முறையே ரூ. 50,000 ரூ. 40,000 முதல் வைத்து, 3 : 2 என்ற விகிதத்தில் இலாபம் நட்டம் பகிர்ந்து வந்தனர். முதல் மீது வட்டி ஆண்டுக்கு 8% வழங்க ஒப்புக் கொள்ளப்பட்டது. எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 10% நிர்ணயித்தனர். எடுப்புத்தொகை *M* ரூ. 15,000, *R* ரூ. 10,000. எடுப்பு மீதான வட்டி *M* ரூ. 750, *R* ரூ. 500. *M* ஆண்டுக்கு ரூ. 12,000 ஊதியமாகவும், *R* கழிவுக்கு முன் நிகர இலாபத்தில் 10% கழிவாகவும் பெறுகின்றனர். மேற்கண்ட சரிக்கட்டுதல்களுக்கு முன் தொழிலின் 2005 மார்ச் 31-ம் நாளோடு முடிவடையும் ஆண்டின் நிகர இலாபம் ரூ. 60,000. இலாப நட்டப் பகிர்வு கணக்கையும், முதல் கணக்கையும் தயாரிக்க.

52. ஒரு நிறுமம் பங்கொன்று ரூ. 100 மதிப்புடைய பங்குகளை 10% முனைமத்தில் வெளியிட்டது. 100 பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தது. இப்பங்குகள் மீதான முதல் அழைப்பு தொகை ரூ. 30, இறுதி அழைப்பு தொகை ரூ. 20 பெறப்படவில்லை. இப்பங்குகள் ரூ. 90 வீதம் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக மறு வெளியீடு செய்யப்பட்டன. பங்குகளின் ஒறுப்பிழப்பு மற்றும் மறு வெளியீட்டுக்கான பதிவுகளைத் தந்து பங்கு ஒறுப்பிழப்பு கணக்கு, முதலினக் காப்புக் கணக்குகளை தயார் செய்க.

[ Turn over

www.StudyGuideIndia.com

## பகுதி - ஈ

( மதிப்பெண்கள் : 3 × 20 = 60 )

*குறிப்புகள் :* i) எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்க. இவற்றுள் **53**-வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

ii) **அனைத்து** வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

53. அ) 1. 4. 2003 அன்று திரு கண்ணன் ரூ. 2,62,500 முதல் வைத்து வியாபாரம் தொடங்கினார். அவர் ரூ. 42,000 மதிப்புள்ள அறைகலன் வாங்கினார். அவர் வங்கியிலிருந்து ரூ. 52,500 கடன் பெற்றார். தன் சொந்த செலவிற்காக அவர் எடுத்த தொகை ரூ. 75,600. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு 2004, மார்ச் 31-ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதி கணக்குகளைத் தயாரிக்க.

| | ரூ. |
|---|---|
| கடன் விற்பனை | 7,00,000 |
| ரொக்க விற்பனை | 3,50,000 |
| கடன் கொள்முதல் | 7,87,500 |
| ரொக்கக் கொள்முதல் | 1,40,000 |
| கூலி | 15,750 |
| அளித்த தள்ளுபடி | 3,500 |
| சம்பளம் | 17,500 |
| வியாபாரச் செலவுகள் | 14,000 |
| விளம்பரம் | 17,500 |
| இறுதி கடனாளிகள் | 2,62,500 |
| இறுதி கடனீந்தோர் | 1,75,000 |
| இறுதி சரக்கிருப்பு | 1,22,500 |
| இறுதி ரொக்க இருப்பு | 1,64,150 |

அறைகலன் மீது 10% தேய்மானம் நீக்குக.

*அல்லது*

www.StudyGuideIndia.com

ஆ) $P$, $S$, $V$ என்ற கூட்டாளிகள் அவர்கள் முதல் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர்.

31.12.2004 அன்று அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

31. 12. 2004 நாளைய இருப்பு நிலைக்குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | | ரூ. |
|---|---|---|---|---|
| கடனீந்தோர் | 21,000 | வங்கி | | 16,000 |
| காப்பு நிதி | 48,000 | கடனாளிகள் | 20,000 | |
| முதல் : | | ( – ) ஐயக்கடன் ஒதுக்கு | 1,000 | 19,000 |
| $P$ | 90,000 | சரக்கிருப்பு | | 18,000 |
| $S$ | 60,000 | எந்திரம் | | 48,000 |
| $V$ | 30,000 | நிலம் கட்டடம் | | 1,00,000 |
| | | நற்பெயர் | | 48,000 |
| | 2,49,000 | | | 2,49,000 |

பின்வரும் பகர்வுக்கு உட்பட்டு 1.1.2005 அன்று $S$ விலகினார்.

அ) நிறுவனத்தின் நற்பெயர் ரூ. 36,000 என மதிப்பிடப்பட்டது.

ஆ) நிலம் கட்டடத்தின் மீது 10% மதிப்பேற்றம் செய்யப்பட்டது.

இ) ஐயக்கடன் ஒதுக்கு ரூ. 600 குறைக்கப்பட்டது.

ஈ) முழுமையாக இலாப நட்டக் கணக்கில் பற்று வைக்கப்பட்ட காப்பீட்டுத் தொகையில் ரூ. 2,000 முன் கூட்டிச் செலுத்தியக் கணக்கிற்கு மாற்றப்பட்டது.

உ) கொடுபடா பழுதுபார்ப்புச் செலவுக்கு ரூ. 3,000 ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மறுமதிப்பீட்டுக் கணக்கு, முதல் கணக்கு மற்றும் புதிய கூட்டாண்மையின் இருப்புநிலைக் குறிப்பு ஆகியவற்றைத் தயாரிக்க.

www.StudyGuideIndia.com

54. திரு. கணேஷ் என்பவர் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட இருப்புக்களிலிருந்து 31.3.1999-ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளை தயார் செய்.

**1999, மார்ச் 31 ஆம் நாளைய இருப்பாய்வு**

| பற்று இருப்புகள் | ரூ. | வரவு இருப்புகள் | ரூ. |
|---|---|---|---|
| எடுப்புகள் | 4,000 | முதல் | 20,000 |
| வங்கி ரொக்கம் | 1,700 | விற்பனை | 16,000 |
| ரொக்கம் | 6,500 | கடனீந்தோர் | 4,500 |
| கூலி | 1,000 | | |
| கொள்முதல் | 2,000 | | |
| சரக்கிருப்பு ( 1.4.1998 ) | 6,000 | | |
| கட்டடம் | 10,000 | | |
| கடனாளிகள் | 4,400 | | |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகள் | 2,900 | | |
| வாடகை | 450 | | |
| கழிவு | 250 | | |
| பொதுச்செலவுகள் | 800 | | |
| அறைகலன் | 500 | | |
| | 40,500 | | 40,500 |

*சரிக்கட்டுதல்கள் :*

i) 31.3.1999 அன்று சரக்கிருப்பின் மதிப்பு ரூ. 4,000

ii) முதல் மீது வட்டி 6% அனுமதிக்க வேண்டும்

iii) எடுப்பு மீது வட்டி 5% அனுமதிக்க வேண்டும்

iv) கொடுபட வேண்டிய கூலி ரூ. 100

v) முன்கூட்டிச் செலுத்திய வாடகை ரூ. 50.

www.StudyGuideIndia.com

55. பின்வரும் *J. Ltd.* என்ற நிறுமத்தின் இருப்பு நிலைக்குறிப்பிலிருந்து கணக்கிடுக.

i) நடப்பு விகிதம்

ii) நீர்மை விகிதம்

iii) புற-அக பொறுப்புகள் விகிதம்

iv) உரிமையாளர் விகிதம்.

**J. Ltd. என்ற நிறுமத்தின் 31.3.2004 ம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு**

| *பொறுப்புகள்* | *ரூ.* | *சொத்துக்கள்* | *ரூ.* |
|---|---|---|---|
| பங்குமுதல் | 20,000 | நற்பெயர் | 12,000 |
| காப்புகள் | 10,000 | நிலைச் சொத்துக்கள் | 28,000 |
| கடன்கள் | 20,000 | சரக்கிருப்பு | 10,000 |
| கடனீந்தோர் | 6,000 | கடனாளிகள் | 2,000 |
| வங்கி மேல் வரைப் பற்று | 4,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகள் | 2,000 |
| | | ரொக்கம் | 6,000 |
| | 60,000 | | 60,000 |

56. பின்வரும் விவரங்களிலிருந்து அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர், 2004 மாதங்களுக்கான ரொக்க திட்டப்பட்டியல் தயாரிக்க.

| *மாதம்* | | *விற்பனை (ரூ.)* | *கொள்முதல் (ரூ.)* | *செலவுகள் (ரூ.)* |
|---|---|---|---|---|
| 2004 | செப்டம்பர் | 10,00,000 | 8,00,000 | 1,10,000 |
| " | அக்டோபர் | 12,00,000 | 12,00,000 | 1,30,000 |
| " | நவம்பர் | 14,00,000 | 8,00,000 | 1,50,000 |
| " | டிசம்பர் | 16,00,000 | 10,00,000 | 1,70,000 |

*கூடுதல் தகவல்கள் :*

i) அனைத்து விற்பனயும் ரொக்க விற்பனையாகும்.

ii) சரக்களித்தோர் அனுமதித்த கடனின்காலம் ஒரு மாதம்

iii) செலவுகள் ஒரு மாதம் கடந்த பின் செலுத்தப்படுகிறது

iv) 1.10.2004 தொடக்க ரொக்க இருப்பு ரூ. 90,000

v) ரூ. 4,00,000 மதிப்புள்ள ஒரு சொத்து டிசம்பரில் வாங்கப்பட உள்ளது.



www.StudyGuideIndia.com

57. *M* வரையறு நிறுமம் ஒன்று ரூ. 10 மதிப்புடைய பங்குகளை ரூ. 2·50 முனைமத்தில் 20,000 பங்குகளை வெளியிட்டது. தொகை கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

| | |
|---|---|
| விண்ணப்பத்தின்போது | ரூ. 2·50 |
| ஒதுக்கீட்டின்போது | ரூ. 5·00 ( முனைமம் சேர்த்து ) |
| முதல் அழைப்பின் போது | ரூ. 3·00 |
| இறுதி அழைப்பின் போது | ரூ. 2·00 |

30,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 5,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. 5,000 பங்குகளுக்கான விண்ணப்பத்தொகை ஒதுக்கீட்டிற்கு சரி செய்து கொள்ளப்பட்டது. இதர தொகை முழுதும் பெறப்பட்டது. குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

www.StudyGuideIndia.com